Koviloor Digital Library

5-6

வாஸிஷ்டம், பகவத் கீதை

பாகவதம் &

உபநிஷத்

6560
R65(பொது)

Koviloor Digital Library

Koviloor Digital Library

தொகுத்து அருளியவர்

பிரம்மஸ்ரீ
திருவடித்தூளி ஸ்வாமிகள்

5-6

கோவிலூர் ஆண்டவர் நூலகம், கோவிலூர்
A. No. 6560
R65 (பொது)

வெளியிடுவோர்
ஸ்ரீ திருவடி குழந்தைகள்
திருஅண்ணாமலை.

Koviloor Digital Library

ஜூன் - 2002
1000 பிரதிகள்

அச்சிட்டோர்
ஆரித்ரா பிரிண்டர்ஸ்
பெங்களூர் - 560 003

Koviloor Digital Library



பிரம்மஸ்ரீ வடிவேல் ஸ்வாமிகள்

Koviloor Digital Library

Koviloor Digital Library

பிரம்மஸ்ரீ திருவடித்தூளி ஸ்வாமிகள்

Koviloor Digital Library

Koviloor Digital Library

5-6

ஸ்ரீ சத்குரு திருவடி துணை

வாஸிஷ்டம்

வஸிஷ்டர் ராமனுக்கு அருளியது

பகவத் கீதை

கண்ணன் பார்த்தனுக்கு அருளியது

பாகவதம்

சுகப்பிரம்மம் பரீக்ஷித்துக்கு அருளியது

உபநிஷத்

உன்னை ஸத்தினிடம் நெருக்கிச் செலுத்துவது

இவைகளிலிருந்து சில உண்மைகள்.

Koviloor Digital Library

Koviloor Digital Library

குழந்தைகளே!

ஸத்யம் என்பதில் 'ஸத்' என்றால் உண்மை; 'யம்' என்றால் இருக்கிறது. அதாவது 'உண்மை இருக்கிறது' என பொருள். தெய்வத்தைப் பற்றியும், ஆத்மாவைப் பற்றியும், பரமாத்மாவைப் பற்றியும், பரம்பொருளைப் பற்றி **விளக்கிக் கூறும் அறிவைப் பற்றியும்,** அதற்கு வழியாக அமைந்திருக்கும் கரண ஒழுக்கத்தையும் **முறையாக உணர்த்தும்** அறிவு சொரூபமே ஸத்யமாகும். அதாவது அதுவே உண்மை யாகும். உண்மை என்பது உடல் உலக சாஸ்திர காவியக் கதைகள் அல்ல. புராண இதிகாச கதைகளும் அல்ல. ஆனுல் இதன் **சாராம்ஸமான** கருத்துக்கள் ஸத்யமாகும்.

தர்மம் என்றால் கால்களால் நடந்து செல்வதும், அப்படி நடந்து **கைகளால் கொடுப்பதும் பெறுவதும்** அல்ல. **அது**

Koviloor Digital Library

புண்ணியமாகும். இந்த புண்ணியத்திற்கு கண்டிப்பாக பிறவி உண்டு.

முன்பு சொன்ன **உண்மையை** ஓர் ஜீவனுக்கு **நிலையறிந்து போதித்து உணர்த்தினால்** அது தர்மம் ஆகும். இதில் உனக்கு **கர்மாவும்** இல்லை **பந்தமும்** இல்லை. புண்ணிய பாபமும் இல்லை. அது பிறவா நிலேக்கு வழிகாட்டுவதாகும். நீயும் பந்தத்திலிருந்து விடுபடுகிறாய் அந்த ஜீவனையும் விடுவிக்கிறாய்.

முதலில் புண்ணியத்தை செய்விக்கலாம். பின்பு நிலை அறிந்து தர்மத்தை போதித்து **உணர்த்தி** ஸத்ய சொரூபமாக்கலாம். ஆகவே ஸத்யம் பேச வேண்டும், தர்மம் செய்ய வேண்டும் என்பது மஹான்கள் அனுபவம். ஆனால் இன்று இதற்கு மாறாக ஸத்யம் செய்யப்படுகிறது, தர்மம் பேசப்படுகிறது.

Koviloor Digital Library

வாஸிஷ்டம்

Koviloor Digital Library

Koviloor Digital Library

ஹே ராமா!

உலகின் கூட்டமாயும், அற்பமாகியும், விஸ்தாரமாகியும் உண்டான இச்ஜகம் அனைத்தும் ஆதிஅந்தம் இல்லாமலும், களங்கம் இல்லாமலும், எந்த குற்றவுணர்வும் இல்லாமலும் இருக்கின்ற பரவஸ்துவென நிச்சயித்து துன்பத்தை நீக்குவாய்.

ஹே ராகவா!

வாக்கினால் விவரிக்கும் பொருட்டு அந்த ஒன்றே பரம் என்றும், பரம்பொருள் என்றும், பரமாத்மா என்றும், ஆத்மா என்றும், சித் என்றும் அனேக நாமாக்களுடன் ஸத்துக்களால் (ஞானிகளால்) விளக்கப்பட்டிருக்கிறது. இந்த ஆத்மாவாகிய சித்ரூபமே அதிசயமாக தான் தானே மற்றொன்றுபோல் பொருந்தி அதாவது குற்றம் உள்ளதுபோல் ஜீவ நாமாவையும் (ஜீவாத்மா எனவும்) பொருந்தியிருக்கிறது என உணர்.

Koviloor Digital Library

ஹே ராமா!

ஜீவன் என்று சொல்வது அறியாமையின் அதாவது அஞ்ஞானத்தின் அதாவது கவனக்குறைவின் **ஓர் திரையாகும்.** இந்த திரை ஆத்மாவை மூடியிருக்கிறது என்றும், அதனுல் ஜீவாத்மா என்றும், ஜீவன் என்றும், சிதாபாசன் என்றும் சொல்லலாம். சிதாபாசன் என்றால் சித் சொரூபமாகிய ஆத்மா ஆபாசப்பட் டிருக்கிறான் அதாவது பந்தப்பட்டிருக்கிறான் என பொருள் கொள்ளலாம்.

ஆத்மா அசையாதது, மறையாதது, அழியாதது எனச் சொல்கிறார்களே எனக் கேட்டால், **வெங்காயம்** (உள்ளி) என்ற ஓர் பொருளை **காண்கிறோம்;** பெயரிட்டு (நாமா கொடுத்து) அழைக்கிறோம். அந்த வெங்கா யத்தை உரித்துப் பார்த்தால் தோல்கள்தான் தோன்றுகிறதே தவிர வெங்காயம் தோன்ற

வில்லை. அதைப்போல சித்தாகிய ஆத்மாவை அறியாமை மூடியிருப்பதாக பொருள் கொள்ளவேண்டும். அதை ஏன் அப்படி பொருள் கொள்ளவேண்டும் என்று கேட்டால் உலகின் நிலையில் சூரியன் உதயம், அஸ்தமனம் என காலம் குறிப்பிட்டு **விவகரிக்கிறோம்.** ஆனால் சூரியன் உதிப்பதும் இல்லை; அஸ்தமிப்பதும் இல்லை; ஆனால் விவகரித்து பேசுகிறோமே!

அப்படியானால் அது **தற்காலிக** உண்மையாகி விடுகிறது. அது **நிரந்தர** உண்மையாகாது. இப்போது வெங்காயத்தை உரித்து உரித்து பார்த்தால் **ஒன்றும் இல்லை** என்றாகி விடுகிறது. அப்படி ஒன்றும் இல்லை என்பதுவே ஸத்தாகிய ஆத்மா.

ஓர் உப்புக் கட்டியை ஓர் பாத்திர ஜலத்தில் போட்டால் அந்த உப்பை **எப்படி காண**

Koviloor Digital Library

முடியாதோ ஆனால் அதை தொட்டு நாவில் வைத்து எப்படி **உணரமுடிகிறதோ** அப்படி ஆத்மாவை உணர முடியுமே தவிர காண முடியாது. அதைப்போல ஓர் ஆல விதையில் படர்ந்து விரிந்த ஓர் ஆல விருட்சம் இருக்கிறது. விதையை பிட்டுப்பார்த்தால் ஒன்றும் இல்லை. **உணர்ந்து நோக்கினால்** விருட்சத்தை உணர முடியும். உருவம் இல்லாத சுக்கில சுரோணிதத்தில் ஓர் உருவம் எப்படி **சூட்சுமமாக** இருக்கிறதோ அதைப்போல் இந்த ஸத்தாகிய ஆத்மா சூட்சுமத்திற்கும் சூட்சுமமாகும்.

இந்த அறியாமை (அஞ்ஞானம்) எப்படி வந்தது என்றால் மாயாமனதால் வந்ததாகும். மனம் எப்படி வந்தது என்றால் ஓர் விளக்கின் அடியில் இருள் எப்படி வந்ததோ அப்படி வந்ததாகும். விளக்கின் ஒளியையும் இருளையும் எப்படி **விலக்க முடியாதோ** அதைப்போல் **ஆத்மாவின் ஓர் சாயலே**

Koviloor Digital Library

மனமாகும். இந்த மனதின் சொரூபம் வாஸனையாகும் அதாவது கோடானு கோடி குணங்களாகும். இந்த குணங்கள் நாம ரூபத்தைப் பற்றிஎழும். இந்த குணங்களின் இரு பிரிவுகள் **நான்** என்ற **அஹங்காரமும்**, உடைமைகளை **எனது** என பாவிக்கும் **அபி மானமும்** ஆகும். இதுவே சொந்த பந்தம் என ஆகிவிடுகிறது.

இந்த சொந்த பந்தத்தின் இனிமையை (இது சுகம் அல்ல) சுவைத்து சுவைத்து சுவைத்து ஜன்ம ஜன்மாந்தரமாக இந்த ஜீவ போர்வை **தடித்து விட்டது வலுத்து விட்டது. நான், எனது** என்ற இனிமையின் சுவையை என்று இந்த ஜீவன் விடுகிறானோ அன்றுதான் சொந்தம் என்று பாராட்டிய பந்தம் என்ற திரை விலகும். இதன் விளக்கம் இனி தருகிறோம்.

Koviloor Digital Library

இவர்களின் உண்மை கருத்தை தருகிறோம். உணர்க.

அரசனாகிய மாணவன் சொல்கிறான் : அரசுரிமையைத் துறந்தேன், மனைவி மக்களை துறந்தேன், பொன் பொருளைத் துறந்தேன், போகங்கள் அனைத்தையும் துறந்தேன், இந்த கானகத்தையும், இந்த குடிலையும் துறந்தேன். நான் இதுவரை பூஜித்த சிவலிங்கத்தையும் அதற்குரிய பூஜா பாத்திரங்களையும், பூஜா விதிகளையும் துறந்தேன். நான் கட்டி இருந்த வஸ்திரங்களையும், அரைஞாண் கயிறையும், அதில் தொங்கும் கௌபீனத்தையும் துறந்தேன். இப்போது நான் **சகல தியாகம் செய்து திகம்பரனாகி விட்டேன்.** இனி பற்று, பிடிப்பு (பிரியம்) என்பதற்கிடமில்லை. எம் குரு தேவா! ஆகா! ஆகா!! ஆனந்தம் அடைந்தேன் என்றான்.

எம் கும்பமுனி (சூடாலை) சொல்கிறார்: என் அன்புக் குழந்தாய்! **நீ இன்னமும் ஒன்றையும்**

Koviloor Digital Library

விடவில்லையே!!! புத்திசாலியாக இருக்கிறாய். அறிவு சொரூபம் ஆகவில்லை. புத்தியை கெடுத்து அறிவு சொரூபம் ஆனாலல்லவோ அனைத்தையும் விட்ட நிலையும், பூரண திருப்தியும், குறைவற்ற நிலையும், அந்த ஒன்றைத் தொட்ட நிலையும் 'அது நீ; நீயே அது' என்ற நிறை நிலையும் பெறமுடியும். இப்போது நீ சொன்ன அனைத்தும் உன் புத்தியின் (மனதின்) விகல்பமேயன்றி நிருவிகல்பம் அல்ல.

குழந்தாய்!

அதைத் துறந்தேன் இதைத் துறந்தேன் என அடுக்கிக் கொண்டே வந்தாயே, உன் வார்த்தையின் **மாயா ஜாலத்தை** அறிவு பூர்வமாக உணர்ந்து பார். துறந்தேன் துறந்தேன் எனக்கூறும் நீ **துறந்தேன்** என்றால் அதைப்

Koviloor Digital Library

பிரித்துப்பார். துறந்தேன் = துறந்தது ஏன்? என பொருள்படும். அப்படியானால் **எதை எதனால் விட்டாய்?** என கவனி.

எதை?

உடல், உலக, நாமரூப வஸ்துக்களின் வாஸனையை அதாவது குணங்களை என பொருள்.

எதனால்?

எண்ணும் (கற்பனை செய்யும்) உன் **வஞ்சமாயாமனதிலிருந்து** அந்த மோஹ வஸ்து, பிரியவஸ்து, இனிமை வஸ்துக்களின் மேலுள்ள நாம ரூப குணத்தை விட்டாயா? இல்லையே! நன்றாக உணர்.

இப்போதும் உன் நாடு, வீடு, மனைவி மக்கள், பொன், பொருள், இந்த காடு, குடில், பூஜை, பூஜா வஸ்துக்கள், பூஜா விதி ஆகிய இவை அனைத்தும் உன் **மனதில்** குடியிருக்

Koviloor Digital Library

கிறதே! எப்படி என்றால் அந்த எண்ணம் உன் மனதில் இருக்கிறதே! அது இன்னமும் நீங்கவில்லையே! அதை விட்டால் அல்லவோ **சர்வ சங்கப் பரித்தியாகம்** ஆக முடியும்.

நான் : நான் செய்துவிடுவேன் என்னால் முடியும். நான் இல்லையானால் இது முடியாது. இப்படி நான் நான் என பாவிக்கும் **அஹங்காரத்தை** விடு. இதை பிரித்துப்பார். அஹம் + காரம் = அஹங்காரம். இதன் உட்பொருள் அஹம் என்று சொல்லப்பட்ட நீ **காரமாக** அதாவது **எரிச்சலாக** அதாவது தாங்கமுடியாத **துக்க சொரூபமாக** இருந்தால் அமைதி ஏது? சாந்தி ஏது? சுகம் ஏது? ஆகவே நான் என்ற வரி வடிவையும், நான் என்ற ஒலி வடிவையும் விடு. வாக்கியார்த்தமாக விட்டால் லட்சியார்த்தமான சுகம் பெறமுடியும்.

என்னுடையது : உன்னுடைமை நீ

Koviloor Digital Library

ஒருவன் தானே. உன்னையன்றி அய லில்லையே. இதற்கு இந்த பாடலை உணர்.

நின்னிடையே நிச்சலமாய் நிலைத்து நிற்கும்
நிலைமையதே நிகரற்ற மோட்சமாகும்
தன்னிடையே தானாகத் தனித்திடாமல்
தரங்கமென (அலைகளென) சலிப்பதுவே
பந்தமாகும்.

உன்னியிடில் ஓர் உருவாய் உன்னையன்றி
உலைவுதரும் காரணமோர் அணுவுமில்லை
(எம்) தன்னியனே ஆதலினுல் நீ யெப்போதும்
தன்னிடையே தானாகத்தனித்திருப்பாய்.

இதைவிடுத்து கணத்துக்குகணம் மாறுவ தாயும், மறைவதாயும், **தற்காலிகமாக** வந்து இருந்து மறைவதாயும் உள்ள நாம ரூப குணங்களை எனது என நம்பி **சொந்தம்** கொண்டாடி **பந்தவலையில்** சிக்கி மீளாத

Koviloor Digital Library

பிறவிச் சுழலில் சிக்கி அழிகின்றாயே இது என்ன அறிவீனம்???

இந்த இரண்டையும் (நான், என்னுடையது) எப்பொழுது வாக்கினால் கெடுத்து மனதினால் சுத்தமாக விட்டு விடுகிறாயோ அன்று நீ முக்தனாகவே இருப்பாய். இது உறுதி.

ஹே ராமா!

இன்பமும் இல்லை துன்பமும் இல்லை. ஜனனமும் இல்லை மரணமும் இல்லை. ஜனன மரணமென்னும் சுழலில் சுழல்பவர்களும் இல்லை. ஒன்றென்று எப்போதும் எவ்விடத்தும் இருக்கின்ற வஸ்துவே இருக்கின்றது. அதனால் கவலையோ துக்கமோ பயமோ தேவையில்லை. போனவற்றையும், நடப்பன வற்றையும், வருவனவற்றையும் பற்றி **கற்பனை பண்ணாதே.**

Koviloor Digital Library

ஹே ராமா!

அக்கினியை விட்டு உஷ்ணம் எப்படி நீங்காதோ அதேபோல் தாழ்வை செய்கின்ற அதாவது குற்ற உணர்வை எண்ணுகின்ற அதாவது இனிமையையும் துன்பத்தையும் எண்ணுகின்ற கற்பனையானது இந்த மனதை விட்டு நீங்காது. அதாவது அது ஜன்மஜன்மாந்தர வாஸனையாகும்.

ஞானத்தின் சலன சக்தியே மனமாகும் !
சலிக்கின்ற அம்மனமே ஜகமாகும் !!
சலனம் அற்றால் மனம் நசிக்கும் !!!

சங்கல்பம் என்னும் சலன சக்தியை இந்த பிரம்மமே மிகக் குற்றச்சாட்டாக சலனமாகப் பண்ணும். அப்படி தன்னால் சங்கல்பித்த பொழுது அச்சங்கல்பமானது **பரந்தவடிவாகி, வேறுபோலாகி, உலகத்து உருவமாகி** தன்னைத்தானே பார்க்கும் **மனமாகும்.** அதன்

Koviloor Digital Library

(மனதின்) சங்கல்பமாகவே இச்ஜகத்தைப் பார்க்கக் கடவாய். குற்ற உணர்வுகள் பொருந்திய **வேற்றுமைகள்** அனைத்தும் நீக்கிய ஞானமே உன் யதார்த்த சொரூபமாகும். அதுவே சுகமாகும். அதுவே நலமாகும்.

ஹே ராகவா!

சமுத்திரத்தின் ஜலத்தைப் போல இந்த ஜகங்கள் அனைத்தும் ஏகமாகிய சின்மாத்ர சொரூபமாகும். அந்த சின்மாத்ரமானது (சின்மாத்ரம் = திவலை = துளி) தன்னுடன் பொருந்திய புத்தியை கிரஹித்ததினால், நிறைந்த ஜலம் பேரலையினால் அசைகின்ற தன்மையைப் போல் சஞ்சரிக்கும். அலை, நுரை, குமிழி என்பதைப்போல் பரம், சிவம், பரமாத்மா, ஜீவாத்மா, ஜீவன் என **பல நாமாக்களினால் விவகரிக்கப்படும்.** இந்த விகாரமான நாமாக்களை தான்தானே

Koviloor Digital Library

சங்கல்பித்துக்கொண்டு அதனால் இந்த மனம் விவகாரத்தை அதாவது பிரச்சனையை அதாவது கலகத்தையும் களங்கத்தையும் உண்டு பண்ணி குழம்பிக் கொள்கிறது.

மனம் = எண்ணம்.	உ-ம்: மரங்கள்
புத்தி = கற்பனை	உ-ம்: மரங்களின் நாமாக்கள்.
சித்தம் = உறுதி	உ-ம்: இதுதான் என்ற உறுதி.

அஹங்காரம் = நான், என்னுடையது என புசிப்பு (அனுபவித்தல்). **இவை மறக்க முடியாத பதிவேடுகள்.**

ஹே கார்முகில்வண்ணா!

அந்த சித்சொரூபமானது கொஞ்சம் அசைந்த மாத்திரத்தில் ஜக சிருஷ்டி உண்டாகும். இப்படி தோன்றிய ஜக சிருஷ்டியை சாத்வீகத்தில் விளைந்த ஞான **சுகமாகப்**

Koviloor Digital Library

பார்த்தால் அஃது இறந்து போகும் அதாவது ஜக சிருஷ்டி மறையும்.

இதற்கு உதாரணம்: ''நாயைக் கண்டால் கல்லைக் காணோம்; கல்லைக் கண்டால் நாயைக்காணோம்'' அதாவது ஓர் வீட்டின் முன் ஓர் நாய் படுத்திருப்பதுபோல் தோன்றும். அப்போது அந்த கேட்டைத் (கதவை) தாண்டி யாரும் போகமாட்டார்கள். **அது கல்நாய்** என அறியாததினால் பயம் உண்டாகும். அந்த வீட்டுக்காரர் நம்மை அழைத்து உள்ளே வைத்து பேசிக் கொண்டிருக்கிறார் என வைத்துக்கொள்வோம். அந்த கல்நாயை தொட்டுப்பார்த்து 'கல்நாய்' என்று **தெரிந்து கொண்டால்** அந்த வினாடியே பயம் போய்விடுகிறது.

பிறகு எந்த நேரம் போனாலும் அந்த நாயைக் கண்டு பயப்படுவோமா? மாட்டோம். அதற்கு **உண்மை நாய்** என்ற தோற்றத்தைக்

Koviloor Digital Library

கொடுக்க முடியுமா? முடியவே முடியாது. நேற்று பார்த்த நாய் என்ன ஆயிற்று? ஆனால் அந்த கல்லில் நாய் வந்ததும் இல்லை, அது மறைந்ததும் இல்லை. **இதுதான் உண்மை.**

100 வருஷம் இருள் மண்டிக்கிடந்த ஓர் அறையில் ஓர் தீக்குச்சியை கிழித்த மாத்திரத்தில் **அந்த வினாடியே** இருள் மறைந்து ஒளி நிறைவதுபோல் **உண்மை உணர்வு** ஸ்வயமாக சித்தித்து விட்டால் உலகமும் உலக வஸ்துக்களும் நம் யதார்த்த சொரூபமாகவே தோற்றும். அதாவது அந்த அறையில் 100 வருஷம் இருள் இருந்தது என எதை வைத்து நிரூபணம் பண்ணமுடியும்? அந்த கல்லில் பல வருஷங்களாக ஓர் நாய் இருந்தது என எதை வைத்து நிரூபணம் பண்ணமுடியும்?

அதைப்போல் **உண்மையை உணர்வு பூர்வமாக** உணர்ந்துவிட்டால் **அடுத்த வினாடியே** நான் 50 வருஷமாக நாம

ரூபமுள்ள இந்த உலகைப் பார்த்தேன் எனச் சொல்ல எந்த நிரூபணமும் ஸத்யமாக இருக்காது. இது பிரமாணம். அதாவது குருடர் களுக்கு இந்த உலகம் இருள்மயமாகவே தோற்றுவதுபோல அஞ்ஞானிகளுக்கு உலகத்தின் தோற்றம் இருப்பு அசைவு, இன்பதுன்பம், மறைவு, தோற்றிக் கொண்டுதான் இருக்கும். உண்மையின் உணர்வு சொரூபமான ஞானிகளுக்கு, நல்ல கண்ணுள்ளவர்களுக்கு உலகம் எப்படி பிரகாசமாக தோற்றுகிறதோ அப்படி தன் யதார்த்த சொரூபமாக, ஸ்வயம் பிரகாசமாக, தம்மையன்றி அன்னியமில்லா தன்மையாக, சுகமாக, நலமாகத்தான் தோற்றும். இது பிரமாணமான வசனமாகும்.

ஹே ராமா!

திடவைராக்கியமில்லாத அறியாத் தன்மையினால் கயிற்றை பாம்பு என

Koviloor Digital Library

மருட்சியில் பார்ப்பதைப்போல் உலகை நாம ரூப குணங்களாக, திரிஸ்யமாக அஞ்ஞானி காண்கின்றான்.

ஆனால்

ஓர் பக்குவ ஆன்மா **பரப்பிரத்யட்க்ஷ மாகின்ற** (சத்தியத்தை உணர்வு நிலையில் அனுபவ ரீதியாக உணர்த்தக்கூடியது) ஆத்மாவை **ஞான சாஸ்திரத்தினாலும், சாதுக்கள் சங்கத்தினாலும், தடையற்ற அப்பியாசத்தினாலும்** அதாவது **நிதித்யாசனத் தினாலும்** உணர்கிறான்.

முரட்டு மாட்டைப்போல் பாய்ந்து செல் கின்ற இந்த மனமானது குளிர்ந்த சாந்தத்தில் நின்றால் (காமம், குரோதம், லோபம், மோகம், மதம், சந்தேகம் ஆகிய குற்ற உணர்வுகளை நீக்கி நின்றால்) பழமையான ஞான அனுபூதி மயமாகிய ஞான சம்பத்துக்கள் ஸ்வயமாகத் தோற்றும். இது உறுதி.

Koviloor Digital Library

ஹே தசரத தனையா!

எதிரில் கண்ணுக்கு கண்ணாக நேரில் தோற்றக்கூடிய ஜீவர்களையும் ஜகத்தையும் ஜீவசைதன்ய சொரூபமாக அறியும் மனதை அப்பிரம்மமாகச் சொல்லலாம். பரவிய விஷயங்களை அறிந்தும் அதை **அனுபவியாத** மனதை அப்பிரம்மமாகச் சொல்லலாம். மிகுந்த கர்மாக்களைச் செய்தாலும் அவை நான் அல்ல நம்முடையதும் அல்ல என்ற மலைபோல் உறுதியான **நிச்சய மனதை** அப்பிரம்மமாகச் சொல்லலாம். நிர்விகாரியான ஆத்மாவே நாம ரூப எண்ணத்தினால் **மனம் ஆகிறது.** அந்த எண்ணத்தை விவகரிப்பதனால் **புத்தி ஆகிறது.** அப்படி விவகரித்ததை நிச்சயமாக உறுதிப் படுத்துவதனால் **சித்தம் என ஆகிறது.** அப்படி நிச்சயிக்கப்பட்ட நாம ரூபத்தை நான், எனது என குணரூபமாக புசிப்பதனால் (அனுபவித்தலினால்) **அஹங்காரம் ஆகிறது.**

Koviloor Digital Library

தனது வேற்றுமையினால் தனித்த இந்த மனமே உலகமாகும்.

அஞ்ஞானத்தின் வித்தானது சங்கல்பம் என்ற மனமாகும். தன்னால் சங்கல்பிக்கப்பட்ட பொழுதில் வேற்றுமையை உண்டாக்கி தனக்குத்தானே வளரும். வேற்றுமையினால் வளரும் இந்த அஞ்ஞான விருட்சமானது இன்ப துன்பம் என்னும் (குண சொரூபமான) காய் கனிகளை நிறையக் கொடுக்கும். இதை நான், எனது என புசிக்கும் ஜீவன் அந்த சுவையை மறக்க முடிவதில்லை. அது ஜன்ம ஜன்மாந்தரமாக தொடர்ந்து வருகிறது. இதுவே புனரபி ஜனனம் புனரபி மரணமாகும்.

ஆகவே

இது மிகுந்த துன்பமேயன்றி ஆனந்தம் அணுவளவும் இல்லை. **மனதின் சங்கல்ப மார்க்கத்தில் செல்லாதே.** தற்காலிக

Koviloor Digital Library
6560
265 (பொது)

நிலையாக தோற்றுகின்ற இந்த ஜகத்தின் மார்க்கத்தில் **ஒரு கணமும்** பாவனை பண்ணாதே. சங்கல்பமான பாவனையை விட்டுவிட்டால் ஜகம் நாசம் அடையும். திட சங்கல்பத்தால் (அது நாம் நாமே அது) அதிடசங்கல்பத்தை (ஜகத் ஜீவ ஈஸ்வராதி **நாம ரூப குணம்**) முழுமையாக கெடுத்தால் முறத்தில் காய வைத்த உளுந்து எப்படி ஓர் வினாடியில் **'டப்'** என்ற ஓர் சப்தத்துடன் வெடித்து சிதறி பயிறு வேறு, தோல் வேறு ஆகிறதோ அதே போல் மனம் மஹத்தாகும்; ஜகத் தோற்றம் மறையும் அதாவது அதுவும் மஹத்தாகும். அங்கு அனைத்தும் ஒன்றே; அது சுகமே; அது நலமே; அது நாமே என ஆகிவிடும். இது உறுதி.

குழந்தாய் ராமா!

பாவனை கெடவும் ஆசை கெடவும் உன் மனக்கண் முன் வரும் அனைத்து

கோவிலூர் ஆண்ட...
A. No.............

Koviloor Digital Library

விஷயாதிகளையும் (விஷத்தையும்) மஹா மௌனமாய், வருவதை எதிர்த்து ஜெயித்த வர்களே மனதை ஜெயித்தவர்களாவர்.

பாவனை கெடுவதற்கு : உடல் உலக பாவனையை விடு. முதலில் இறைவன் பொருளாகவும், பின் இறைவன் சொரூப மாகவும், முடிவில் நம் யதார்த்த சொரூப மாகவும் பார்.

ஆசை கெடுவதற்கு :

காமம் : ஆண் பெண் உடலின்பம்.

குரோதம் : வஞ்சினம். அதாவது ஒருவர் அறிந்தோ அறியாமலோ பேசியோ, செய்தோ உள்ள தீய எண்ணங்களை எண்ணி எண்ணி மனம் புழுங்குதல், திரும்ப அந்த தவறை அவருக்குச் செய்தல்.

மோஹம் : ஒரு பொருளின் மீது தீராத வெறி.

Koviloor Digital Library

லோபம் : உடைமைகளை விடமுடியாத பிடிப்பு.

மதம் : குலப்பற்று, மதப்பற்று.

சந்தேகம் : எந்த வார்த்தையிலும் செயலிலும் இருபிரிவாக பார்த்தல்.

இந்த ஆறும் ஆசையாகும். இவை கெட வேண்டும்.

மஹாமௌனமாய் காட்சிகளிலும் நிகழ்ச்சிகளிலும், வார்த்தையின் மாயாஜாலங்களிலும் மனதை நிறுத்தாமல் (பதிவு பண்ணாமல்), நியதி வழுவாமல், எதிலும் பாரபட்ச தோஷம் இல்லாமல் ஒழுங்காக விகிதாச்சாரப்படி நடைபெறுகிறது என ஆனந்தமாய் முதலில் வாய்பேசா மௌனமும் பின் சாதனையை அனுசரித்து மனம் பேசா மௌனமாய் (எண்ண எழுச்சி இல்லாமல்) அமைதியும் சாந்தியும் பெற்றிருந்தால் அது மஹா மௌனமாகும்.

Koviloor Digital Library

இந்த மூன்றிலும் சிரத்தையாக, அனுபவமாக உள்ளவர்களே மனதை ஜெயித்தவர்களாவர்.

ஹே ராகவா!

வருங்காலத்தைப் பற்றி கற்பனை பண்ணி **ஆசை வைக்காதவனும்;** நிகழ் காலத்தில் நடைபெறும் **கர்மாவாக மாத்திரம்** இருப்பவனும்; சென்ற காலத்தில் **கர்மாவாக இல்லாதவனும்;** பந்தம், பாசம், பற்று இவைகளை **முக்காலத்தும் எண்ணாதவனும்**; துக்கம், கவலை, பயம் இவற்றில் ஆட்படாதவனும்; பக்திமான்களிடத்தில் தாசனாகவும்; வஞ்சகர்களிடத்தில் மஹா மௌனியாகவும்; குழந்தைகளிடத்தில் விபரம் அறியா சிசுவாகவும்; மெய் நாட்டம் உள்ளவர்களிடம் அறிவு சொரூபமாகவும்; தம் ஆசானிடத்தில் அமிர்த சொரூபமாகவும் ஓர் சாதகன் இருக்க வேண்டும்.

கற்பனையினால் நினைக்கப்பட்ட மனோ சங்கல்பத்தினால் இந்திர ஜாலத்திற்கிணையான இந்த ஜகம் உண்டாயிற்று. ஆபரணமென்னும் சப்தத்தின் அர்த்தமானது பொன்னையல்லால் வேறே உண்டோ? அதைப்போல ஜகம் என்னும் இந்த சப்தத்திற்கு அர்த்தம் பிரம்மம் (ஆத்மா) அல்லாமல் வேறே உண்டோ? கட்டையில் கள்வன் உண்டானது போன்று ஆத்மாவில் ஜகம் உண்டாயிற்று. அதாவது கட்டையில் கள்வனும் ஆத்மாவில் ஜகமும் உண்டானது உன் மனோமய மயக்கமே. அஞ்ஞானி தமது மனோமய சங்கல்பத்தினால் மயங்குகிறான். ஞானி தனது சுத்தத் தெளிவான அறிவினால் மயங்கான்.

அரிசிக்கு உமியும், தாமிரத்திற்கு (செம்புக்கு) களிம்பும் எப்படி மறைப்போ, எப்படி உபாதையோ ஆனால் கர்ம விஷேசத் தினால் எப்படி நீங்கிப்போமோ, அப்படியே ஆத்மாவில் மனோமய கற்பனையான உடல்

Koviloor Digital Library

உலகமும் **திட விசாரணையினால்** அவசியம் நீங்கிப் போகும்.

இந்த ஜகம் எப்படிப்பட்டது? நாம் யார்? என பொய்யை உதறி உண்மையை அறியும் பரியந்தம் ஜனன மரண மயக்கமும் பயமும் தொடர்ந்து வந்துகொண்டே இருக்கும். கோடானுகோடி ஜகங்களும், ஆங்காங்கே தோற்றும் ஜீவர்களும் நம் **மனோமய சிருஷ்டியே.** மன எண்ணத்தை நிறுத்தி விட்டால் சிருஷ்டியும் இல்லை. தோற்றமும் இல்லை. ''அனைத்தும் நாமே'' என ஆனந்தம் ஒன்றைத்தவிர வேறு எந்த குண தோஷமும் தோற்றாது.

''அனைத்தும் மனோமய சிருஷ்டியே''

''மனம் மயமாகிவிட்டால் அங்கு சிருஷ்டி இல்லை''

''அனைத்தும் நாமே'' இது உறுதி.

Koviloor Digital Library

ஹே கௌசல்ய தனையா!

தொடர்கின்ற உடல் உலக உணர்ச்சியாகிய **குணங்கள்** எந்த அளவுக்கு உன் மனதில் தோன்றுகிறதோ அந்த அளவுக்கு ஆத்மஞானம் தோன்றாது. மனம் புத்தி சித்தம், மாயை, ஈசன், ஜீவன் முக்காலமும் இல்லையென என்று உணர்கிறாயோ அந்த வினாடியே நீ அதுவாகவே இருப்பாய். இது உறுதி.

Koviloor Digital Library

Koviloor Digital Library

ஸ்ரீமத் பாகவதம்

Koviloor Digital Library

Koviloor Digital Library

குழந்தாய்!

ஜடபரதன் வரலாற்றில் ஓர் உண்மையை உணர்வாய். ஜடபரதன் அரசனாக இருக்கும் போது சத்கர்மாவையும், ஓர்மை பக்தியையும் அனுபவித்தான். சிறிது கவனக்குறைவினால் **மனம் கீழ்நோக்கி** சென்றுவிட்டது. அடுத்து மான் ஜன்மாவில் வைராக்யத்தாலும், மனனத் தாலும் அந்தர்முகமாக (மேல்நோக்கி) செல்ல முழு முயற்சி செய்தான். அதில் முற்றுப் பெற்றான். அடுத்து மூன்றாவது ஜன்மாவில் உயர்குணமும், மனுஷ்ய ஜன்மாவும் பெற்றான். அதில் அனுபவ ஞானத்தைப் பெற்று (நிதித் யாசனத்தை அடைந்து) தூலத்தை **உணர்ச்சி யற்ற கட்டையாக்கி மெய் உணர்வோடு** இருந்தான்.

இதில் கவனிக்கவேண்டியது :

அரச ஜன்மாவில் ஓர் மான் குட்டிக்காக மனம் கீழ் இறங்கி (ஜீவகாருண்யத்திற்கு) வந்தது.

Koviloor Digital Library

அடுத்த மான் ஜன்மாவில் எதையும் **கண்டும் கேட்டும்** சாட்சி (கருணை நிலையில்) ஆனான்.

அடுத்த ஞான நிலையில் ஓர் வன தேவதை பல உயிர்களை (மனிதர்களை) கை வேறு, கால் வேறு, தலை வேறு, உடல் வேறு என சிதைக்கிறாள்; அவர்களும் ஐயோ! அம்மா! குத்துகிறாளே ! கொல்கிறாளே! சாகிறோமே! என **பிராண அவஸ்தையுடன்** அலறுகிறார்கள்.

''அன்று அந்த மான் குட்டியை கண்ட கண்கள்''
– ''அஞ்ஞானக் கண்கள்''

''இன்று கோரமான கொலைகளை கண்ட **கண்''**
– ''ஞானக் (அறிவுக்)கண்''

ஆனந்தமும் அமைதியும், சாந்தியும், மஹா மௌனமும் அடைந்து விகாரம் விவகாரம் இல்லாமல் இருக்கிறான். எந்தக் கேள்வியும்

Koviloor Digital Library

பதிலும் இல்லை. முகத்தில் **சாந்தி** என்ற **புன்முறுவல்** ஒன்றுதான் இருக்கிறது.

''இதைப்படித்த உடன் **ஈவு இரக்கம்** அற்றவன்தான் ஞானி ஆக முடியுமா? என கேள்வி எழுகிறதா?''

கீழே நோக்கவும்

இதே ஜடபரதன் விதிவசத்தால் (பிராரப்தத்தால்) ஓர் பல்லக்கு தூக்குகிறான். இங்கு அவன் தூலமே பளுவின் காரணமாக கஷ்டத்தை அனுபவிக்கிறது. ''இங்கும் மன எழுச்சி இல்லை.''அமைதியாக **எந்த குற்ற உணர்வும்** இல்லாமல் உண்மையை (ஸத்யத்தை) உரைக்கிறான். இது முக்கியம் அல்ல. ஆனுல் நடந்து செல்லும் பாதையில் ஊர்ந்து செல்லும் எறும்பு, புழு, நத்தை, பூச்சி ஆகிய ஜீவர்களை மிதித்துவிடாமல் அதி ஜாக்கிரதையாக நடக்கிறான்.

Koviloor Digital Library

அன்று போன காருண்யம் இப்போது ஏன் எப்படி வந்தது? **நன்றாக கவனிக்கவும்.** இதைத்தான் எம் ஸ்ரீபரமஹம்ச தேவர் சொல்கிறார்:

''ஓர் நிறை ஞானியின் தூலம் **உலர்ந்த சருகு** போன்றது. அது சாக்கடையிலும் விழும், கோபுர உச்சியிலும் சேரும்.'' **''ஞானிக்கு மனம் இல்லை''** அது எந்த வினாடியும் மஹத்தாகவே இருக்கிறது. குணங்களால் பற்றப்படுவதில்லை. அங்கு குணம் இருந்தால் **ஜீவகாருண்யம்** உண்டாகும். குணம் **அமைதி** ஆனால் **கருணை** உண்டாகும். குணம் மௌனம் ஆனால் **சாந்தியின் ஆனந்தம் (மஹாமௌனம்)** ஒன்றே தோற்றும். எதுவும் வந்ததுவும் (நாமரூபம்) இல்லை. அசைந்ததும் (குண விருத்தியும்) இல்லை. எதுவும் மறைந்ததும் (இருந்ததற்கு தடயமே) இல்லை. போக்கு வரவு அனைத்தும் மனதின் விகார குணமே.

Koviloor Digital Library

உன் கண்களும் காதுகளும் மனம் வெளியே செல்லும் பாதைகளாகும். உடல் உலக காட்சிகளாக பரவியிருக்கும் வலையில் இந்த மனம் **சிக்கிக்கொள்கிறது.** சிக்கிக்கொள்கிறது என்று சொல்வதைவிட இன்பதுன்பமாக சுவைக்கிறது என சொல்லலாம். இன்பமும் துன்பமும் **மனதின் குணமே** தவிர வெளிப் பொருள்களில் இல்லவே இல்லை. அதாவது ஒருவனுக்கு இன்பமாக தோற்றுவது வேறொருவனுக்கு துன்பமாகத் தோற்றும்.

வினைப்போகத்தால் வந்த ஓர் தேகம் வியாதியால் நலியும்போது **நான் துன்பப் படுகிறேனே** என்கிறான். பொருள் இல்லாமல் அவதியுறும்போது **நான் கஷ்டப்படுகிறேனே** என்கிறான். ஓர் காட்சியில் மருட்சி உண்டாகும்போது **நான் பயப்படுகிறேனே** என்கிறான். காட்சிகளும் ஓசைகளும் ஒன்று சேர்ந்து தாக்கும்போது **நான் கெட்டுப்**

Koviloor Digital Library

போனேனே என்கிறான். விதியால் தூலம் முடியும்போது **நான் சாகிறேனே** என்கிறான். **என்ன அறிவீனம்???**

உடம்போடும் உலக பொருள்களோடும் **சொந்தம்** என **பந்தப்படுவது** மனம் செய்யும் கூத்து ஆகும். இந்த மனதை சற்று நிறுத்தி பொறுமையாக இருக்கப்பழகினால் மனம் குணங்களுக்கு அடிமையாகி கீழ் இறங்காமல் மேல்நோக்கிச் செல்லும். அங்கு மேலே சொன்ன துன்பம், கஷ்டம், பயம், கெட்டது, மரணம் முதலியது தோற்றவே தோற்றாது.

''வினைப்போகமே ஓர் திரேகம் கண்டாய்''

''வினைதான் ஒழிந்தால் தினைப்போதளவும் நில்லாது கண்டாய்'' என சத்துக்கள் சொன்னார்கள்.

''எல்லாம் என்னுடையது என்றால் அங்கு அனைத்து குணங்களும் பிரவர்த்திக்கும்''

Koviloor Digital Library

''எல்லாம் இறைவனுடையது என்றாலோ, எல்லாம் இறைவனே என்றாலோ அங்கு குணங்கள் பிரவேசிக்க மாட்டாது.''

''எல்லாம் **நாமே** என்றால் அங்கு சொல்லவோ அறியவோ ஒன்றும் இல்லை. அங்கு ஜீவ குணங்களும் இல்லை. ஈச நிலையும் இல்லை. அறிவு ஒன்றே; ஆனந்தம் ஒன்றே; சுகமாகிய நலம் ஒன்றே இருக்கும். இது உறுதி.''

உலக பாவனையில் கண்ணன் பதினாயிரம் பெண்களுக்கு கணவனாக இருந்தான். ஒவ்வொரு மனைவியிடமும் பத்து பத்து குழந்தைகளை சிருஷ்டி செய்தான். அதனால் அவன் உலகபான்மையில் ஓர் பெரிய **சம்சாரி** என பெயர் பெற்றான். **பெருத்த குடும்பி** ஆனான்.

ஒரு சமயம் ஆய்ச்சியர் கொண்டு வந்த பால், தயிர், வெண்ணை இவைகளை குடம்

Koviloor Digital Library

குடமாக குடித்தும், சாப்பிட்டும் தீர்த்தார் துர்வாஸ மகரிஷி. இப்போது இந்த இருவரும் ஓர் பெரிய நதியைக் கடக்க ஓர் உபாயம் சொல்கின்றனர். இதை கவனிக்கவும்.

கண்ணன் கூறியது: யாம் **நித்ய பிரம்மச்சாரி** என்பது **ஸத்யமானால்** யமுனையே வழிவிடு என சொல்லி நதியில் இறங்கச் சொன்னான்.

''யமுனையும் விலகி வழிவிட்டது.''

துர்வாஸர் கூறியது: யாம் **நித்ய உபவாஸி** என்பது ஸத்யமானால் யமுனையே வழிவிடு என சொல்லி நதியில் இறங்கச் சொன்னார்.

''யமுனையும் விலகி வழிவிட்டது.''

குழந்தைகளே! இதில் இரண்டை உணரலாம். அதாவது ''ஒன்று வாக்கு – அது ஸத்யம்'' மற்றொன்று ''செயல் அது – கர்மா.''

Koviloor Digital Library

வாக்கு செயல்படும்போது அது ஒலியாக வரும்போது **மெய்யுணர்வோடு,** உடல் உலக உணர்ச்சியற்று, தெளிவாக, உறுதியாக இருக்க வேண்டும். அதாவது நீ ஸத்யத்தை அன்றி அஸத்தியம் இல்லை. நீ ஆத்மாவன்றி அனாத்மா இல்லை. நீ உண்மையே அன்றி உடல் இல்லை. இங்கு வாக்கு **அக்னியாகும்.** அது கர்மாவை உலர்த்தி (பக்குவப்படுத்தி) முடிவில் சுட்டெரித்து விடும்.

அடுத்து வாக்கு **பிராணன்** (காற்று) ஆகும். குறிப்பிட்ட **இடங்களில்,** குறிப்பிட்ட **காலங்களில்** அது சஞ்சரிக்கும். அடுத்து அந்த வாக்கு (காற்று) ஆகிய பிராணன் பிறந்த இடமும், உலாவும் இடமும் **ஆகாயமாகும்.** இது மூலப்பிரகிருதி அதாவது அவ்யக்தமாகும் அதாவது சுத்த சூனியமாகும். இந்த ஆகாயம் இல்லாத இடம் இல்லை.

Koviloor Digital Library

ஜலமும், பிருதிவியும் உயர எறிந்தாலும் கீழ் நோக்கியே இறங்கும் (விழும்) தன்மை உடையது. இந்த இரண்டும் **வினை** சம்பந்தம் உள்ளது அதாவது **நான் எனது** சம்பந்தம் உள்ளது. இதன் அசைவு இந்த தூலக் கண்களுக்குத் தோற்றும். காற்றும் ஆகாயமும் சூட்சுமமானது, தோற்றாதது. **அது மனோவடிவ மாகும்.** அக்னி யானது வினை சம்பந்தப்பட்ட ஜலம், பிருதிவி இவைகளை பக்குவப்படுத்தி எரித்து இல்லாமல் பண்ணி தாமும் மயமாகி காற்றுடனும், ஆகாயத்துடனும் கலந்துவிடும்.

ஓர் தீபமானது காற்றில்லையானால் எரியாது. அதே தீபம் காற்றினாலேயே அணைக்கப்படும். அதேபோல் காற்று (பிராணன்) சம்பந்தப்பட்ட இந்த மனமானது **உடல் உலக** பொருள் நாம ரூப சம்பந்தத் தினால் **குணத்தை ஆதாரமாகக்** கொண்டு கீழே இறங்கும். குணம் எழுச்சியற்றால் நாம

Koviloor Digital Library

ரூபம் செயல்படாது. இந்த குணமானது நாம ரூப சம்பந்தத்தை விட்டு விட்டு, காற்றுடன் (மனதுடன்) **மேல்நோக்கிச் சென்று விட்டால் குணமும் இல்லை, அது இருந்து செயல்பட்ட மனமும் இல்லை, அது புகுந்து விளையாடிய வினையும் இல்லை.**

இதிலிருந்து நீ உணர்வது :

கண்ணனும் துர்வாஸரும் **தாங்கி இருந்த தூலம்** ஜலமும் பிருதிவியும்தான். **அது கர்மாதான்.** பால், வெண்ணை, தயிர், பதினாயிரம் பெண்கள், அவர்கள் பெற்ற குழந்தைகள் அனைத்தும் ஜலமும் பிருதி வியுமே! அதுவும் **கர்மாதான்.** இங்கு மனம் எண்ணி **குண சொரூபமாக இறங்கினால்** உடல் உலக செயல்கள் தோற்றும். இது அஸத்தியத்தின் - அஞ்ஞானத்தின் தோற்ற

Koviloor Digital Library

மாகும். இங்கு இன்பதுன்பம், கஷ்டம், கவலை, பயம், சந்தேகம் தோற்றத்தான் செய்யும்.

இந்த மனம் (பிராணன் அல்லது காற்று) குணத்தை வினையோடு கீழே தள்ளிவிட்டு ஆகாயத்தோடு மேல் நோக்கி கலந்து விட்டால் அங்கு ஆனந்தம் ஒன்றுதான் இருக்கும்.

குழந்தாய்! வினை வேறு மனம் வேறு. மனதை வினையை விட்டு பிரித்துப் பழக வேண்டும். இந்த மனமும் வினையும் **பின்னிப் பிணைவது குணமாகும்.**

ஒவ்வொரு அசைவிலும், ஒவ்வொரு நிகழ்ச்சியிலும், ஒவ்வொரு காட்சியிலும் **குணத்தால் விகார, விவகார விபரீதத்தால்** வேற்றுமைப்படுத்தாமல் இந்த மண்ணும் தண்ணீரும் அந்த ஒன்றில் இருந்து வந்தது தானே! இந்த மன எண்ணத்தாலும் குணத்தாலும் தானே இப்படி விபரீதம் தோற்றுகிறதென

Koviloor Digital Library

உண்மை உணர்வுடன் நீ உணர்ந்தால் அனைத்தும் ஒன்றே! அது நலமே! அது சுகமே! அது யாமே! என்ற உறுதியான உணர்வு பெறுவாய்.

''வாக்கே ஜகத் ஜீவ ஈஸ்வராதிகளாக இருக்கிறது.''

''சங்கல்பமே நரகம்; சங்கல்ப ரஹிதமே மோட்சம்.''

''எத்பாவம் தத்பவதி.''

இந்த மூன்றும் எண்ணமும் வாக்குமாக இருக்கிறது. கர்மா சம்பந்தமான ஜட சொரூபத்தின் **எண்ண வார்த்தைகளை** விடு.

இதன் பொருள் :

எண்ணம் இல்லாமலேயே வாக்கு வந்தால் அது பலிதமாகும். இங்கு வினை முடியும்.

இங்கு வினை தோற்றாது.

அதன் அனுகூலமாக வாக்கும் வரும். இதற்குத்தான் அனுக்ரஹம் எனப் பெயர்.

இது எல்லோருக்கும் வருவதில்லை. வினையின் **துக்கத்தையும்,** மனதின் **இனிமையையும்** முழுமையாக விட்டவர்களுக்கே இது சாத்திய மாகும். இதுவே கண்ணனுக்கும் துர்வாசருக்கும் நாம ரூபத்தில் நடந்த ஓர் சம்பவம்.

''கர்மாவை எண்ணிச் சொல்வது
அருள் வாக்கு''

''மனம் மஹத்தில் ஒன்றி தாமே வருவது
அமுதவாக்கு''

மனம் **கர்மாவிலும்,** இது வேண்டும் இது வேண்டாம் என்ற **எண்ணத்திலும்** நினைத்து சொல்வது, நீ சொல்லும் ஜீவனுக்கு கர்மாவை விலக்குகிறாயோ (பரிஹாரம்) அல்லது விளக்குகிறாயோ (இங்கு கர்மா அழிவதில்லை; மறைக்கப்படுகிறது. அது ஒருகால் வேறு

Koviloor Digital Library

சொரூபத்தில் வந்தே தீரும்) அந்த கர்மாவை நீயே பலவந்தமாக ஏற்றுக் கொள்கிறாய்.

''சும்மா இருப்பதுவே சுட்டற்ற பூரணமென்று
எம்மால் அறிதற்கு எளிதோ பராபரமே''
என்றார் தாயுமானவர்.

சுட்டற்ற = சுட்டு + அற்ற.

விளக்கம் : **வினை** சுட்டு சாம்பலாக வேண்டும். **மனம்** எண்ண விருத்தி அற்றுப்போக வேண்டும். இந்த இரண்டும் **முடிந்துவிட்டால்** அதுவே ''சும்மா'' இருக்கும் நிலையாகும்.

Koviloor Digital Library

Koviloor Digital Library

ஸ்ரீமத் பகவத்கீதை

Koviloor Digital Library

Koviloor Digital Library

எம் பார்த்தா!

நீ சலனமின்றி (அசைவில்லாமல்) பார். நீ சத்தாகவே இருப்பாய். யாம் இந்த ஜீவர்களுக்கு

''கர்மாவோ, கர்மாவின் விகிதாச்சாரமோ, அந்த கர்மாவின் பலனோ கொடுக்கவே இல்லை.''

''ஆனால் ஜீவர்கள் வஞ்ச மாயாவசப்பட்டு **நான்** என அஹங்கரித்தும், **என்னுடையது** என அபிமானித்தும் **மனதினால் அறியாமைக் குள்ளாகி** மயங்குகிறார்கள்.''

''இயற்கையாகிய எம் சொரூபமே அனைத்து காரியங்களையும் **காரணமாக** இருந்துகொண்டு ஒரு வினாடியும் ஒரு நிலையும் தவறாமல் விகிதாசாரப்படி பாரபட்ச தோஷம் இல்லாமல் நடத்தி வருகிறது.''

பாவம் இந்த ஜீவர்கள் ''ஐயோ கெட்டேனே!'' ''ஐயோ செத்தேனே!'' என அலறுகிறார்களே.

Koviloor Digital Library

இங்கு புத்தி கெட்டுப்போச்சு, அறிவு பிரகாசிக்க வில்லை.

காண்டீபா!

தூல பூத தொகுதிகளான சரீரங்களை விட சூட்சுமமான இந்திரியங்கள் பல. (கர்மேந்திரியங்கள் ஐந்து - வாய் (வாக்கு), கை, கால், எருவாய், கருவாய்; ஞானேந்திரியங்கள் ஐந்து - கண், காது, மூக்கு, நாவு (ருசி), தோல் (ஸ்பரிசம்)). அப் பல் இந்திரியங்களிளும் நிச்சயம் பண்ணப்பட்ட புத்தியே (சித்தம்) சூட்சுமம். அப்புத்திக்கு வித்தாயும், சாட்சியாயும் இருக்கப்பட்டவரே தேகி என்ற இந்த கூடஸ்த ஆன்மா. இந்த கூடஸ்த ஆன்மாவே துவம்பத லட்சியார்த்தமான **ஜீவாத்மா** என்றும் தத்பத லட்சியார்த்தமான **பரமாத்மா** என்றும் சொல்லப்படும்.

ஹே அர்ச்சுனா! சகல கர்மாவையும், அதன் பலன்களையும் **முழுமனதோடு** எமக்கு

Koviloor Digital Library

அர்ப்பணம் பண்ணிவிட்டால் அவன் க்ஷேம லாபங்களை யாம் கவனித்துக் கொள்கிறோம்.

இதன் பொருள் :

கோபிகைகள் பால், தயிர், வெண்ணை மற்றும் தம் உடமைகளை அனைத்தும் ''கண்ணனுக்கே'' ''கண்ணனுக்கே'' என சர்வார்ப்பணம் செய்து வந்தார்கள்.

''அவர்கள் மனம் பக்குவப்பட்டது.''

பொருளும், பொருள் எண்ணங்களும் குறைந்து குறைந்து, மறைந்து **உடைமை என்ற கடமை** அனைத்தும் முடிந்து விட்டன. வார்த்தையும், எண்ணங்களும் மாறி ''எல்லாம் கண்ணனே'' ''எல்லாம் கண்ணனே'' என முடிந்து விட்டது.

''அவர்கள் மனம் மஹத்தாகி விட்டது.''

Koviloor Digital Library

இப்போது பொருளோ, அதைப்பற்றிய குணமோ, அதை ஏற்கும் கண்ணனோ, அதை கொடுக்கும் மாயாமனமோ அங்கு இல்லை. அனைத்தும் ஒன்றே என ஆனது. அங்கு நலம், சுகம் தவிர வேறொன்றும் இல்லை.

Koviloor Digital Library

பரமஹம்சர் வாய்மொழி

Koviloor Digital Library

1. எல்லாம் இறைவன் செயல் என்றால் இங்கு புண்ணிய பாபம் ஏது?

2. கூட்டுக்குள் அகப்பட்ட கூட்டுப்புழு குளவியை எண்ணி எண்ணி குளவி ஆவது போல் சகல நிகழ்ச்சிகளுக்கும், சகல காட்சிகளுக்கும் இறைவனே காட்சி, இறைவனே சாட்சி என நீ எண்ணிக் கொண்டிருந்தால் ''எத்பாவம் தத்பவதி'' என நீ இறைவனாகவே ஆகிவிடுவாய்.

3. இறைவன் உன்னை உலகில் வைத்துள்ளார். அவர் செயலால் அனைத்தும் நடை பெறுகிறது என உணர். அப்போது உனக்கு துன்பம் தோற்றாது. அனைத்தும் அவன் செயல் என நீ அனுபவத்தில் உணர்வாய்.

4. இறைவனை நாம் காணமுடியும். அவரோடு பேசமுடியும். பரப்பிரம்மமானது **பல வடிவங்களில்** தன்னைத் தோற்றுவித்துக் கொள்கிறது. ஈஸ்வரனாகவும், ஜகத்தாகவும்,

Koviloor Digital Library

சகல ஜீவர்களாகவும், அவதார புருஷர்களாகவும் தாமே தம்மை தோற்றுவித்துக் கொள்கிறது என உணர். அப்போது நீ காண்பது, பேசுவது எல்லாம் இறைவன் என உணர முடியும். இதை பேதமற்ற அனுபவத்தினால் உணர்.

5. ஒருவன் ஆயிரம் முறை தெய்வ அனுக்ரஹத்திற்கு கடும் முயற்சி செய்யலாம். ஆனால் அவன் அருள் அன்றி அவன் அனுக்ரஹத்தையும் தரிசனத்தையும் பெற முடியாது. சிறிதளவாவது **அபிமானம் அஹங்காரம்** இருக்குமாயின் அவன் இறை அனுக்ரஹத்தையும் தரிசனத்தையும் பெற முடியாது. தன்னை முற்றிலும் **சர்வ சங்க பரித்தியாகம்** செய்தாலன்றி இறை கருணை பெறுதல் மிகு மிகு மிகு துர்லபம்.

6. இந்த ஜீவர்களை **தவிக்க வைத்து தனிக்க வைத்து** அவன் **இயலாத்தன்மை** அடைந்த

Koviloor Digital Library

வுடன் இறைவன் **எங்கும், எல்லாமாய் ஆனந்தமாய்** அருள் பாலிக்கிறான்.

இயலாத்தன்மை: ஒரு ஜீவனிடம் அறியாமையினால் அதாவது கவனக்குறை வினால் தோன்றிய உடல், அதன் செய்கை, அதன் பயனில் நான் என்றும், என்னால் முடியுமென்றும் தோன்றும் **அஹங்காரம்,** தோன்றி மறையும் வஸ்துக்களில் **என்னுடையது** என உரிமை பாராட்டும் (சொந்தத்தால் பந்தம், பந்தத்தால் இன்ப துன்பம், இன்ப துன்பத்தால் ஜனன மரணக்கயிறு) இவைகளை விடமுடியாத **மோஹத்தால்** சூடு, சுரணை, லஜ்ஜை, வெட்கம், மானம், மரியாதை, ரோஷம் ஆகிய

இந்த பாசக்கயிற்றினால் பிணைந்த "அபிமானம்"

Koviloor Digital Library

இவைகள் அனைத்தும் எரிந்து சாம்பலானாலன்றி இயலாத்தன்மை என்ற ''நாதி அற்ற நிலை'' நீ பெற முடியாது. நீ நாதி அற்றவனானால் அவன் ஆதிக்கும் ஆதியாய் உன் ஜோதியாய் ''நீயே அவனாய் அவனே நீயாய்'' ஐக்கிய சகஜானந்த நிலை பெற முடியும்.

மயக்கமாக இருக்கிறதா!!!

மயங்காதே! கலங்காதே!! தளராதே!!! அந்த பாக்கியம் இல்லாதவன் இந்த ஸத்ய வாசகங்களை ''படிக்கமுடியாது,'' ''கேட்க முடியாது'', உணர முடியாது.''

''இவை அனைத்தும் நீ பெற்றிருக்கிறாய்''

ஸ்ரீ பரமஹம்சர் உறுதிமொழி இதுவே.

ஆள் அரவம் கேட்டவுடன் ஆமை எப்படி

Koviloor Digital Library

தன் ஒரு தலை, நான்கு கால் ஆக ஐந்தையும் தன்னுள் இழுத்துக்கொண்டு ஓர் ஓடுமாத்திரமாக தோற்றுவித்துக் கொள்கிறதோ அதேபோல் நீயும் உன் ஞானேந்திரியம் ஐந்தையும் **உள்முகமாக திருப்பி** ஓர் ஜடமாக சஞ்சரிக்க கற்றுக்கொள்.

உள்முகமாக திருப்புவதற்கு :

1. **கண்கள்** கண்டதையும், **காதுகள்** கேட்டதையும் அப்படியே பேசி விடாதே. எண்ணி எண்ணி மனதை பாரம் ஆக்காதே.

2. **உன் மனதின்** பாரமே வாய் மூலமாக வெடிக்கும். இதில் ஜாக்கிரதையாக இரு.

3. **நாசியின்** சுகந்தத்திற்கும், நாற்றத்திற்கும் அடிமையாகாதே. அதை **சமப்படுத்து.**

4. **நாவின் ருசி, அருசி** இரண்டிலும் கவனம் வைக்காதே. எந்த காலங்களில் எதை இறைவன் கொடுத்தாலும் பசிக்கு கொஞ்சம்

Koviloor Digital Library

குறைவாக ஏற்றுக்கொள். ருசிக்கு உணவை ஏற்காதே.

5. **ஸ்பரிசத்தினால்** கெடும் அவுணப்பட்சி போன்று சரீர ஸ்பரிசத்தில் சுகம் கண்டு அழிந்து போகாதே.

இந்த ஐந்திலும் அதி ஜாக்கிரதையாக இருப்பாயாக.

Koviloor Digital Library

உபநிஷத்

Koviloor Digital Library

Koviloor Digital Library

1. ஆசைகளை ஜெயிக்காதவன் எந்தெந்த ஆசைகளைப்பற்றி **விரும்புகிறானோ** அந்த ஆசைகளை அனுபவிக்க திரும்ப பிறவி எடுக்கிறான். எவனுடைய ஆசைகள் இந்தப் பிறவியிலேயே **பூரண திருப்தி** அடைந்து, போதும் என்ற **நிறைவு பெறுகிறானோ** அவனுக்கு ஜன்மா இல்லை.

2. குயவன் சக்கரமானது சுற்றிவிட்ட வேகத்தில் சுழல்வதைப்போல ஓர் ஞானியின் சரீர யாத்திரை நிகழும். சூரியன் பூமியை சுற்றவில்லையெனினும் அது விவகாரத்தில் பேசப்படுகிறது. அதைப் போல் ஞானியின் சரீரம் திரிந்தாலும் உணர்ச்சியற்ற நிலையில் நிகழும் அச்செயல் **அவன் அறிவை மயக்காது.**

3. தேவதைகளுக்கு (காவல் தெய்வங்களுக்கு) ஸ்தோத்திரம், நமஸ்காரம், வழிபாடு

Koviloor Digital Library

செய்யாதவனாகவும், பித்ருக்களுக்கு நமஸ் காரமோ, பிண்ட தர்ப்பணமோ செய்யாத வனாயும், **யதேச்சையாய்** கிடைப்பதை உண்டு, உடை மற்றும் இருப்பிடத்திலும் கிடைத்தது போதும் என நிறைவுடன் ஓர் சாதகன் இருக்க வேண்டும்.

4. காமத்திலும், போகத்திலும் சிதறிப்போன மனதை **தூய எண்ணத்தாலும், பேதமற்ற பார்வையாலும், தன்னிடத்திலேயே தான் ஆனந்திப்பதனாலும்தான்** அடக்க முடியும்.

5. ஞானம் **அனுபவ சித்தி** அடைவதற்கு முன் எவரும் கர்மாவை துறக்கமுடியாது. **பலவந்தமாக** கர்மா நிறுத்தப்பட்டால் அந்த கர்மா (ஆசையின்) காரணமாக ஜன்மா எடுக்கவேண்டும். அதாவது பூவில் தோன்றிய பிஞ்சானது பருத்து முதிர்ச்சி ஆகும் போது பூ உலர்ந்து கருகி தாமே விழுந்து

Koviloor Digital Library

விடும். அதுபோல **ஸ்வயமாக** பிரம்மானந்தம் தோன்றும்போது கர்மா (ஆசை) செயலற்றுப் போகும்.

6. இறந்து போனவனிடத்தில் உயிர் இருந்த அடையாளமான உணர்ச்சிகள் காணப்படாதது போல அஞ்ஞானியிடம் (உலக, உடல், பொருள் பற்றுள்ளவர்களிடத்தில்) ஆத்மா இருக்கும் அடையாளமே தெரியாது.

7. வெளி உருவங்களை கண் என்ற ஜன்னல் வழியாக **மனம் பார்க்கும்;** காது என்ற துவாரத்தின் மூலமாக **மனம்** ஒலிகளை **கேட்கும்;** மூக்கு துவாரத்தின் மூலமாக வாஸனை, நாற்றங்களை **மனம் நுகரும்;** வாயின் வழியாக ருசி, அருசிகளை **மனம் ருசிக்கும்;** சரீர ஸ்பரிசங்களை இன்ப துன்பமாக **மனம் உணரும்.** மேலே சொன்ன ஐந்தும்

Koviloor Digital Library

செயலற்ற **ஜடமாகும்**. அதனுள் இருந்து **இயங்குவது மனமாகும்.** இந்த மனதை உன் அந்தர்யாமியான **ஆத்மா உணரும்.** இந்த ஆத்மாவை எவரும் காணவோ, அறியவோ, உணரவோ முடியாது.

8. வேதங்களை கற்றதாலோ, நுண்ணறிவினாலோ, விரிந்த கேள்வியினாலோ, தர்க்கசாஸ்த்திரங்களினாலோ மந்திர சித்து வித்தைகளினாலோ இந்த ஆத்மாவை ஒருவன் உணர முடியாது. **''அதுவே நாம் நாமே அது''** என்ற ஓர்மையான நிதித்யாசனத்தினாலேயே அவன் அது (ஆத்மா) ஆகிறான்.

9. **துர்நடத்தையினின்று விலகாதவனும்** ஆசைகளை ஜயிக்காதவனும், இந்திரியங்களை அடக்க முடியாதவனும் இந்த ஆத்மாவை உணர முடியாது. பிராம்ண, க்ஷத்ரிய, வைஷ்ய, சூத்திரர் ஆகியோர் சூழ்ந்த இந்த உலகம்

Koviloor Digital Library

எவனுக்கு **சுத்தான்னம்** ஆகிறதோ அவனுக்கு உலகை உண்ணும் (அழிக்கும்) காலதேவன் (எமன்) ஊறுகாய் ஆகிவிடுகிறான்.

இதன் பொருள்: மேலே கூறிய நான்கு வர்ணமும் **பேத உணர்வோடு கூடிய உலகமாகும்.** அப்படி துக்கமும், கலக்கமும், களங்கமும், வேதனையும், துன்பமும், துயரமும், ஜனன மரண பயமும் நிறைந்த இந்த உலகமானது **சலனமற்ற,** மேலே கூறிய எந்த உணர்வும் கூடாமல், **சுத்தமான அன்னம்** என எவனுக்கு உணர்வு பூர்வமாக ஆகிறதோ அவனுக்கு உலகை உண்ணும் காலன் தொட்டு சாப்பிடும் ஊறுகாய் ஆகிவிடுகிறான். அதாவது காலபயம் (மரண பயம்) இல்லை.

10. இறைவன் இந்திரியங்களை வெளி நோக்கு உடையதாக சிருஷ்டித்தார். ஆகையால்

Koviloor Digital Library

இந்த ஜீவன் **வெளித்தோற்றங்களையே** பார்க்கிறான். எவனோ ஒரு தீரன் (ஆயிரத்தில் ஒருவன்) இறவா நிலையை விரும்பி இந்திரியங்களை வெளியே போகவிடாமல் உள்முகமாக திருப்பி தன் பிரத்யட்ச ஆத்மாவையே பார்க்கிறான். இந்த **சர்வசங்கபரித்தியாகி** பெரும் நதியில் **எதிர் நீச்சல்** அடித்துக் கரையேறுவதுபோல் கரை ஏறி விடுகிறான்.

11. உண்மை உணர்வு பெற்றவன் இந்த **உலக வலையை** கண்டு மயங்குவதும் இல்லை, பயம் கொள்வதும் இல்லை. நிலையற்ற வாழ்க்கையில் நிலையானதென எதையும் நாடுவதும் இல்லை. உலகமோ, உயிரினங்களோ, தேவ தெய்வங்களோ அனைத்தும் பரமாத்மாவே என அறிந்ததும் அவன் **பயத்திலிருந்து** விடுதலை பெறுகிறான். பரமாத்மாவே (ஆத்மாவே) ஸத்யமென்றும்,

Koviloor Digital Library

நித்தியமென்றும், அது நாம் என்றும், **இரண்டற்றது** என்றும் அறிந்தவனுக்கு பயம் ஏன்? ரட்சிப்பு எதற்கு? எதிலிருந்து எதை ரட்சிக்க வேண்டும்? இப்படி நித்தியமான ஆத்மாவை உணர வேண்டும். இதுவே உண்மை ஸ்வரூபம்.

12. ஓர் உதாரணம்: அக்கினி பற்றி எரியும் போது அது இடத்திற்கு ஏற்றவாறு **நாமம் பெறுகிறது.** அதாவது அக்கினியே அடுப்பு தீயாகவும், உலை நெருப்பாகவும், ஹோமாக்கினியாகவும் ஜடராக்கினியாகவும், விளக்காகவும், தீவட்டியாகவும், காட்டுத் தீயாகவும் பல வடிவங்களாக தோன்றுவது போல் **தன் தன்மையையும் இழக்காமல்** இருப்பதுபோல் பரமாத்மாவாகிய ஆத்மாவே கண்ணுக்குத் தெரியாத கிருமி கீடகத்திலிருந்து யானை வரையிலும் தேவ தெய்வங்களிலிருந்து ஹரிஹர பிரம்மா வரை

Koviloor Digital Library

''பல வடிவமாக நாம ரூபமாகத்
தோற்றினாலும்
அனைத்தும் நம் ஆத்மாவே,
அதுவே நாம் நாமே அது என
உறுதி கொள்வாயாக.''

13. ''அண்டத்தில் இருப்பதே பிண்டத்தில்,
பிண்டத்தில் இருப்பதே அண்டத்தில்''

இப்படி உண்மையை உணர்ந்து கொண்டு நான், நீ, அவன், அவள், அது, இது என்ற **வேற்றுமைகளைக்** களைவாயாக. உன் அவதிக்கு (கஷ்டம், கவலை, துக்கம், துயரம், சந்தேகம், பயம் இவற்றிற்கு) காரணம் வேற்றுமையே. இந்த வேற்றுமை உணர்ச்சியை நீக்குவாயாக. இந்த வேற்றுமை நீங்கிய மறுவினாடி **நித்திய ஆத்மாவே உணரப்படும்.** பின் ஈஸ்வரன் என்றும், மனிதன் என்றும் இல்லை. தேவன் ஜீவன் என்ற பேதம் இல்லை.

Koviloor Digital Library

குரு சிஷ்யன் என்ற வித்தியாசம் இல்லை. கற்றவனும் மூடனும் இல்லை. மேலோன் தாழ்வோன் என்ற உணர்ச்சி அற்றுப்போகும். அனைத்தும் ஒன்றே அது நாமே என உறுதியாகிவிடும்.

14. ஆத்மா மாறுவதில்லை, தோன்றியதும் இல்லை, மறைவதும் இல்லை, வளர்வதும் இல்லை, தேய்வதும் இல்லை. அனைத்து வாதப்பிரதி வாதங்களும் தர்க்க குதர்க்க சம்வாதங்களும் இங்கே **மறுக்கப்படுகின்றன.** சரீரம், பிராணன், இந்திரியம், மனம் இவை எல்லாவற்றைக் காட்டிலும் இந்த ஆத்மா **தனித்து தான் தானாய்** நித்தியமாய் ஸத்யமாய் ஸ்வயம் பிரகாசமாய் இருக்கிறது. இதை ஸத்குரு உபதேசத்தாலும், உபநிஷத் **விசாரத் தாலும் உணர்வுற்ற** தெளிந்த மனதால்தான் அறிய முடியும்.

Koviloor Digital Library

15. உயர்ந்த மலையில் பெய்யும் **மழையானது** தாழ்வரையில் பல பிரிவுகளாக பிரிந்து ஓடும்போது கங்கை, யமுனை, சரஸ்வதி, பிரம்மபுத்ரா, காவேரி என **நாம ரூபத்தை** பெற்று ஓடுகிறது இதைப் போல் ஒரே ஆத்மாவே பல ஜீவ வடிவங்களாக பிரவாகிக்கும்போது ஆத்மாவை மறந்து விட்டோம். நாமரூபத்தில் மாட்டிக் கொண்டோம்.

16. பதினோரு வாசல் உள்ள இந்த கோட்டையில் (சரீரத்தில்) உள் இருக்கும் இந்த ஆத்மாவை தைலதாரை போல் தியானித்து (நிதித்யாசனம் கூடி) **ஆசை, பற்றுக்களை மனதால் துறந்து** எல்லா கர்மங்களையும் கொஞ்சம் கொஞ்சமாக **முழுவதும் கெடுத்து** ஒன்றும் **செய்யாமலும், செய்விக்காமலும்** இருப்பவனே தீரன். அவனே ஜீவன் முக்தன். அவனே ஜனன மரணம் இல்லாதவன்.

Koviloor Digital Library

பதினோரு வாசல் : கண்கள் 2, காதுகள் 2, நாசி 2, வாய் 1, நாபி 1, மலஜல துவாரம் 2, சிரசின் மேல் பிரம்மரந்திரம் 1 ஆக 11 ஆகும்.

இந்த ஆத்மா ஜீவவடிவங்களில்தான் இருக்கிறது என எண்ண வேண்டாம். க்ஷரம், அக்ஷரம்,. ஜடகடபடாதிகள், பஞ்சபூதங்கள் அனைத்திலும் எங்கும் ஊசி நாட்ட இடம் இல்லாமல் சர்வ வியாபியாக நீக்கமற நிறைந்திருக்கிறது என உணர்.

Koviloor Digital Library

Koviloor Digital Library

முடிவுரை

Koviloor Digital Library

Koviloor Digital Library

கட்டையில் வந்த கள்வனும் கல்லில் வந்த நாயும் தொட்டு உணர்ந்தவுடன் எப்படி மறைந்தனவோ, திரும்ப எத்தனை முயற்சி செய்தாலும் அந்த கள்வனும், அந்த நாயும் எப்படி திரும்ப வரமாட்டாதோ, பல காலம் பார்த்த ஒன்று உண்மையை உணர்ந்த உடன் அது இருந்த தடயமே இல்லாமல் அந்த வினாடியே எப்படி மறைந்ததோ,

அதே போல்

அந்த பிரம்மத்திலிருந்து, அந்த பரமாத்மாவிலிருந்து, அந்த ஆத்மாவிலிருந்து, ''**நம்மிலிருந்து**'' நம் கவனக்குறைவால் தோன்றிய இந்த ''**ஜகத் ஜீவ ஈஸ்வராதி களும்**'' அனைத்தும் அந்த காலாதீத ஒன்றே, அது சுத்த சிவமே, அது மிகுந்த நலமே, ''**நாமே அது அதுவே நாம்**'' என்ற மெய் உணர்வினால் தெளிக.

Koviloor Digital Library

உங்கள் உணர்வு

''அது நாம் நாம் அது'' என்ற உணர்வு பெறுவதற்கு :

அவனே ஹரி ஹர பிரம்மா; அவனே ஸ்வதந்திரன்; அவனே ஸர்வவியாபி; அவனே ஏகமூர்த்தி; அவனே மஹாமூர்த்தி; ஜகத் அனைத்தும் அவன் ஆதீனமே; அவனுக்கு ஆதாரம் வேறு இல்லை; அவன் மனதில் தோன்றுவதைக் கொண்டு மனதை அவனுக்கு ஆதாரமாக கூற முடியாது. கண்ணாடியில் காணும் முகத்திற்கு கண்ணாடி ஆதார மாகாதே. நிலையில்லாப் பொருள்களிடம் நிலை உள்ளவனாகவும் அறிவுள்ள உயிர்களில் அறிவாகவும் அவனே இருக்கிறான். அனைவ ருடைய தேவையை கொடுப்பவனும் அவனே, அவற்றை அனுபவிப்பவனும் அவனே, அனைத்தையும் அழிப்பவனும் அவனே என்ற அனுபவத்தினால் ''நாம ரூப குண தோஷம்'' இல்லவே இல்லை.

Koviloor Digital Library

இந்த ஞானத்தில் உறுதியான உணர்வு பெற்றவன் **மஹாசாந்தியாக** இருக்கிறான். அனைத்து உயிர்களிடத்தும் தம்மை பார்க்கிறான்; தம்மிடத்திலேயே அனைத்து உயிர்களையும் பார்க்கிறான். இப்படி இந்த ஆத்ம ஞானி அடையும் ஆனந்தம் இன்னதென்று சுட்டிக்காட்ட முடியாது. உணர்த்தவும் முடியாது.

இந்த **ஆத்ம சுகம்** தானே ஒளிரும் சுடர் போன்றதா? பிற ஒளியால் பிரகாசிக்கும் பொருளா? இதை புத்தியால் எங்ஙனம் அறிய முடியும்? இந்த கேள்விக்கு விடைகாண வேண்டும். இதை பிறருக்கு யாம் எப்படி விவரித்து சொல்ல முடியும்???

அந்த ஸத்யமான **ஆத்ம சுகம்** விரித்து சொல்லவோ, காட்டவோ, உணர்த்தவோ முடியவே முடியாதது. அந்த ''பெருஒளி வெளியை'' சூரியனும் சந்திரனும், விண்

Koviloor Digital Library

மீன்களும், மின்னலும், அக்கினியும் விளக்க மாட்டா.

அந்த ஒன்றே (பரமே, பரமாத்மாவே, ஆத்மாவே) இவை அனைத்திற்கும் ஒளி கொடுக்கிறது. அந்த ஒன்றின் பிரகாசத்தினால் அனைத்தும் ''மின்மினியைப் போல்'' பிரகாசிக்கிறது என்றே சொல்லவேண்டும். இந்த ஒன்றின் சாஹித்யத்தினாலேயே ஹரிஹர பிரம்மாக்களும், சகலலோக தேவ தெய்வங்களும், சகல ஜீவ கோடிகளும், கோடானுகோடி கோள்களும், அண்ட பிண்ட சராசரங்களும் **''ஒழுங்காக, நியமனப்படி, ஒரு வினாடி தவறாமல்''** தம் கடமைகளை செய்து வருகின்றன என **''அது அது ஆன ஞானிகள்''** உணர்கின்றனர்.

கோவிலூர் ஆண்டவர் நூலகம், கோவிலூர்
A. No. 6560
R65 (பொது)